உ

கடவுள் துணை.

மதுரை

மீனாட்சியம்மன்

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

உ

அம்பாள் துணை.

மதுரை

மீனாட்சியம்மன்

அறுசீரடியாசிரிய விருத்தம்.

எனக்குஅயன் விதிப்படியோ
　　பூருவத்தின்செயல்தானோ வேதோவம்மா
உனக்கடிமை யானபின்பு
　　எதுகுறைவந்தாலும் யுனக்கேபாரம்
வனக்கிளியே மலர்த்திருவே
　　சொக்கரிடபங்கில்வளர் வனசமாதே
என்மனக்கவலை யார்க்குரைப்பேன்
　　எனக்கிரங்கவேண்டுமம்மாமதுரைவாழ்வே.

இனம்பிரிந்த மானதுபோல்
உடல்பதைத்துழுவமையோ டிளைத்தென்னாளு
மனம்பதறி உளன்றுளன்று [ம்
அடியேனுக்கருள்சொற்ற வல்நெஞ்சோதான்
நிசம்படைத்த பெருக்கமதோ
திருவனந்தம்பர முகமோ தாயேயென்மேல்
வனம்பரவிக் கடம்பவனே
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 2

தாயிழந்த கன்றதுபோல்
பாதவித்துநிலைகுலைந்து தவித்தென்னாளும்
தீயிலும் மெழுகதுபோ
லுருகிமனம்வெருங்கூடாய் திகைத்தேனம்மா
தூயமலர் புரந்திருவே
நடம்புரியும்பதத்தாளே தோகைமாதே
மாயவற்கு சகோதரியே
சொக்கர்பங்கில் மீனாட்சி மதுரைத்தாயே. 3

பொல்லாத நெடுநீலி
பழிக்கஞ்சிபழிசுமக்கப் போராய்போராய்
சொல்லாத நாளுமுண்டோ [ல்
சொன்னாலுங்கேட்கிலையோ யென்சொற்கூந்த

எல்லாரும் வாழ்ந்திருக்க
நானொருவன் தாழ்ந்திருக்க இயலோ அம்மா
வல்லாறு களபமுலை
மாமயிலைமீனாட்சி மதுரைத்தாயே. 4

இருபொழுது வருமையினா
லனுதினமும்பிணியதனா லிளைத்துவாடி
உருகுவது அயன்விதியோ
அல்லவென்றாலுமென்சலைஉரைக்கமாட்டே [ன்
திருவுருவே அருளொளியே
தெள்ளமுர்தசேயிழையே தேவர்போற்றும்
மருவணியுங் குழலணங்கே
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே, 5

நஞ்சுதின்ற போதுபோ
லுடல்மயங்கிவருமையினாலிந்தென்னாளும்
சஞ்சலமே சமுத்திரமா
யலையதனில்துரும்பதுபோல் தவித்தேனம்மா
கொஞ்சுகிளி மொழியாளே
கஞ்சமலர்கரத்தாளே தோகைமானே
வஞ்சியிடை திருவனங்கை
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 6

அதிமதுர விதரணம்
பாடுவதுஉன்செயலோஅதுவல்லாமல்
நதிதரித்தோ ரிடப்பாகம்
விளங்குகின்றமாமயிலே நளினமான
கெதிபெறவே யடியேனுக்
குனதுபதந்தந்தருளுவாய் கிருபைவைத்து
மதிநுதல்போல் திருவனங்கை
சொக்கர்பங்கில்மீனாட்சிமதுரைத்தாயே. 7

உலையிலிடு மெழுகதுபோ
லுருகிமனம்வெருங்கூடா புலர்ந்துவாடி
நிலைகுலைந்து மதிமயங்கி
நின்றுமிகபரதவிக்க நீதியோசொல்
கலைமகளே லடிவனங்லை
கமலமுகத்திருமாதே கருணையாளே
மலைமகளே அரந்தழைக்கும்
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே 8
இளமைதனில் வருமையினால்
மனதுமிகநொந்துருகி இடைநதுவாடி
விளைநிலத்தில் களர்வீழுந்த
வாரதுபோலடியேனும் விளங்கநின்றேன்

குளையுயற்ச்சி யன்னனடை
குயில்மொளிச்சி நீகருணைகூர்ந்துரட்சி
மழலைமொழி குயிலனங்கை
சொக்கர்பங்கில்மீனாட்சி மதுரைத்தாயே. 9

திடமுடனே யுனைப்பாட
செல்வம்வுண்டாம்கல்வியுண்டாம் சிறப்பதாக
அடவுடனே யிப்புவியில்
எந்தனுடமொழிக்கிரங்கி அருளேசெய்து
சடைமுடியா ரிடப்பாகம்
பச்சைநிறமாய்நின்ற தையல்மானே
மடமயிலே என்னுடைய
மலர்ப்பதம்தந்தருள்வாய் மதுரைத்தாயே. 10

மதுரைமீனாட்சியம்மன்
அறுசீரடியாசிரியவிருத்தம்
முற்றிற்று.

புத்தக விளம்பரம்.

	ரூ.	அ.
சின்மயதீபிகை	0	8.
முக்திசோபானம் 23 யோகாசனப்படங்களுடன்	0	12
பகவத்கீதை கிரந்தஸ்லோகம், தமிழ் ஸ்லோகம், தமிழ் தாத்பர்யத்துடன் கூடியது பாகெட்சைட்	1	0
ஞானத்திரட்டு,இதில் விவேகாநந்தரது பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், இவைகளின் தமிழ்மொழி பெயர்ப்பு இரண்டு பாகங்களடங்கியது	1	0
தத்துவதரிசினி 1-ம் பாகம்	0	10
ஞானதரிசினி 2-ம் பாகம்	0	10
பரமபத மார்க்கம்	0	8
சுத்தநிராலம்ப மார்க்கம்	0	4
ஸ்ரீ கிருஷ்ண போதாம்ருதமென்னும் பன்னிரண்டுஇராஜர்கள் கதை	0	12

விலாசம்:—

. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்
புத்தக வியாபாரிகள், பார்க் டவுன், சென்னை.